10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 149 வெள்ளிக்கிழமை ஒக்ரோபர் 20 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## வடக்குக்கும் ஜே.வி.பிக்கும் நாட்டில் வேறு சட்டமா?

கொழும்பு, ஒக்.20

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்திருந்த போதிலும் போராட்டம் செய்தவர்களை கைது செய்ய பொலிஸார் தவறியிருக்கும் நிலையில், தெற்கில் ஆர்ப்பாட்டம் செய்யும் தங்களை மட்டும் பொலிஸார் கைது செய்வார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

"பொலிஸ்மா அதிபரைப் பற்றி பேசி காலத்தை வீணடிக்க விரும்பவில்லை. ஒன்றிணைந்த எதிர்கட்சிக்கும், முன்னிலை சோஷலிசக் கட்சிக்கும் பொலிஸ்மா அதிபர் ஒரு சட்டத்தையும், ஜே.வி.பிக்கும், வடக்கு மாகாணத்திற்கும் இன்னுமொரு சட்டத்தையும் அவர் அமுல்படுத்துகின்றார். நாங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் எங்களை கைது செய்கிறார்கள், கண்ணீர்ப்புகைத் தாக்குதல்,

07

# "எங்களை மீட்டெடுங்கள்"

யாழ்.பல்கலை சமூகத்துக்கு அரசியல் கைதிகள் கண்ணீர் கடிதம்

கொழும்பு, ஒக்ரோபர் 20

தமது விடுதலைக்கான பெரும் பொறுப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் பொறுப்பெடுக்க வேண்டும் என தமிழ் அரசியல் கைதிகள் யாழ்.பல்கலைக்கழக சமூகத்துக்கு கண்ணீர்க் கடிதம் அனுப்பியுள்ளனர்.

"யாழ். பல்கலைக்கழக சமூகத்திற்கு, பூட்டிய சிறையில் இருந்து ஓர் அன்புரிமை வேண்டுகோள்!" எனத் தலைப்பிட்டு பல்கலைக்கழகத் துணைவேந்தர், பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், அனைத்துப்பீட மாணவர் ஒன்றியத்தினர் மற்றும் கல்விசாரா ஊழியர் சமூகத்தினர் என அனைவரும் ஓரணியில் நின்று ஒருமித்துக் குரல் உயர்த்தி தமது விடுதலையை வலுப்படுத்த வேண்டும்" என அவர்கள் அக்கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறையிலிருந்து அரசியல் கைதிகள் எழுதிய கடிதம் வருமாறு,

அடிமைச் சாசனத்திற்கு அத்திபாரமாகக் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றின் பெயரில் கைதுசெய்யப்பட்டு இலங்கையின் பல்வேறு சிறைக்கூடங்களிலும் நெடுங்காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்

07

## கொழும்பு திரும்பினார் கோட்டபாய ராஜபக்ச



கொழும்பு,ஒக்.20

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ச நாடு திரும்பியுள்ளார். நேற்று முற்பகல் 8.30 இற்கு அவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தினை வந்தடைந்தார். கோட்டாபய ராஜபக்ச நாடு திரும்பும் போது அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்தே கைது செய்யப்படக்கூடும் என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எனினும் அவர் கைது செய்யப்பட்டிருக்கவில்லை. கோட்டாபய ராஜபக்ச தனது புதல்வரின் நலன் குறித்து அறிந்துக் கொள்வதற்காக அமெரிக்கா சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## இருவேறு இடங்களில் கத்திக் குத்து இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக்.20

நேற்றும் நேற்றுமுன்தினம் இரவும் ஆவரங்கால், அல்வாயில் இடம்பெற்ற இரு வேறு கத்திக் குத்து சம்பவங்களில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

ஆவரங்காலைச் சேர்ந்த செல்லத்துரை ரஜீவன் (வயது32), வரணியைச் சேர்ந்த மயில்வாகனம் கார்த்திகன் (வயது -21) ஆகியோரே இச்சம்பவங்களில் படுகாயமடைந்தவர்களாவர்.

ஆவரங்காலைச் சேர்ந்த செ.ரஜீவன் என்ற இளைஞர் நேற்றுக் காலை 8.30 மணியளவில் பணிக்குச் சென்று கொண்டிருந்த



போது, மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த இருவர் அவரை கத்தியால் சரமாரியாகக் குத்தினர்.

இதில் முதுகு, கழுத்துப் பகுதிகளில் அவர் காயமடைந்தார். கழுத்தில் குத்திய கத்தி முறிந்து விடவே தாக்குதலைக் கைவிட்டு இருவரும் தப்பிச் சென்றனர்.

07

## மழுப்பியது அரசு சொதப்பியது பேச்சு

கொழும்பு, ஒக்.20

நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் அவர்களுக்கு எதிரான வழக்குகள் மீதான விரைவான விசாரணை உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் சட்டமா அதிபர் மற்றும் நீதியமைச்சருடன் கலந்துரையாடி பதிலொன்றை வழங்குவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சட்டமா அதிபரும், நீதியமைச்சரும் வெளிநாட்டுக்குச் சென்றிருப்பதோடு எதிர்வரும் திங்கட்கிழமை அவர்கள் நாடு திரும்பிய பின்னர் இது குறித்து தாம் கலந்துரையாடுவதாகவும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

07

## வெண்ணை திரளும்போது தாழியை உடைக்க வேண்டாம்

கொழும்பு, ஒக்.20

பிரபாகரனது ஆசை நிறைவேறிவிட்டது தமிழீழம் கிடைக்கப்போகிறது என தென்பகுதியில் பொய் பிரசாரம் செய்து அரசியல் தீர்வைக் குழப்ப சதி இடம்பெறுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா குற்றம் சாட்டியுள்ளார். மல்லாவி பிரதேச வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

"பிரபாகரனது ஆசை நிறைவேறிவிட்டது. தமிழீழம் பிறக்கப்போகிறது என தெற்கில் பிரசாரம் செய்கிறார்கள். வடபகுதியிலுள்ள

07

## யாழ். வந்தார் நோர்வே தூதர்

யாழ்ப்பாணம் ,ஒக்.20

யாழ். மாவட்டத்துக்கு நேற்று வருகைதந்திருந்த நோர்வே நாட்டின் இலங்கைக்கான தூதுவர் தோர்ப்ஜோர்ன்

கௌசாட்சதர் மற்றும் அவரது குழுவினர் யாழ்.மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகனை சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பின் போது யாழ். மாவட்ட அபிவிருத்திகள் மற்றும் மீள்குடியேற்றம் உட்பட உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் ஆராயப்பட்டது. (எ)





## நிமலராஜனின் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக்.20

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றுள்ளது. யாழ் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் யாழ். மேல்நீதி மன்ற வளாகத்திற்கு அருகாமையில் உள்ள கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் பொது நினைவுத் தூபியில் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது நினைவுத் தூபியில் அவரது உருவப்படம் வைக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தி சுடர் ஏற்றப்பட்டது. (எ)

## "புதிய அரசியலமைப்பு வேண்டாம்" பொய்ச் செய்தி என ரணில் சீற்றம்

கொழும்பு, ஒக்.20

மல்வத்தை மஹாநாயக்கர் நாட்டில் இல்லாத வேளையில், புதிய அரசியல் யாப்பு தேவையில்லை என்று அவர் தெரிவித்ததாக செய்திகள் வெளியிட்டமை பிழையானது என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க சீற்றமடைந்துள்ளார்.

அரசியல் யாப்பு

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச வங்கிகளில் இலங்கை கொள்ளை

## ஜீ.எல். பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.20

"தாய்வான் வங்கியொன்றில் பணம் கொள்ளையிடப்பட்டமை தொடர்பாக, லிட்ரோ காஸ் நிறுவனத்தின் தலைவராக இருந்த ஷாலிலா மூனசிங்க கைதுசெய்யப்பட்டமை, இந்த அரசாங்கத்தின் ஊழலும் கொள்ளையும், மத்திய வங்கியிலிருந்து சர்வதேச வங்கிகளுக்குச் சென்றுள்ளமையைக் காட்டுகிறது" என, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்ட அக்கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஜி. எல். பீரிஸ், மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், "ஷாலிலா மூனசிங்க, அரசாங்கத்துடன் தொடர்புகளைக் கொண்ட ஒருவராவார். வங்கி மீதான இணையத் தாக்குதலை மேற்கொண்டவர், இலங்கையில் உயர் பதவியை வகிப்பவராவார். அவரை யார் நியமித்தார்கள்? அவரைப் போன்ற திருடனுக்கு, அதிகாரங்களை யார் வழங்கினார்கள்? அரசாங்கத்தின் ஏனைய உயர்தரப்பினரோடு, அவருக்கு என்ன தொடர்பு காணப்படுகிறது? இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட வேண்டும்" என்று தெரிவித்தார். (எ)

## ரணில் இன்று விசேட உரை

கொழும்பு,ஒக்.20

நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக, விசேட உரையொன்றை, நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சால் முன்னெடுக்கப்படும் உடகம கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமான, அசோக புரவின் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாடாளுமன்றத்தில், விசேட அறிக்கையொன்றை வெள்ளிக்கிழமையன்று நான் விடுப்பேன். முதலீட்டாளர்களை கவர்வதற்கும் கிராமிய அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கும், அரசாங்கம் எவ்வாறு திட்டமிடுகிறது என்பதை, நாட்டுக்கு நான் அறிவிப்பேன். அதேபோன்று, உயர் கடன் நிலைமையை, 2018ஆம் ஆண்டு எவ்வாறு நாங்கள் எதிர்கொள்ளப் போகிறோம் என்பதை, நிதியமைச்சர் மங்கள சமரவீர, தனது பாதீட்டு உரையில், நவம்பர் 9, இல் தெரிவிப்பார்" என்று, பிரதமர் குறிப்பிட்டார். (எ)

## நாலம் மாடியிலிருந்து விழுந்த நோயாளி பலி

கொழும்பு,ஒக்.20

கேகாலை - வரக்காபொல வைத்தியசாலையின் நான்காவது மாடியில் இருந்து விழுந்து நோயாளி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த நோயாளி தனக்கு ஏற்பட்ட அமில பித்தம் நோய்க்கு சிகிச்சை பெற கடந்த செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை வைத்தியசாலையின் நான்காவது மாடியில் இருந்து விழுந்துள்ளார். இதில் சம்பவ இடத்திலேயே அவர் பலியாகியுள்ளார். 36 வயதான நோயாளி நான்காவது மாடியில் இருந்து எப்படி விழுந்தார் என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (உ)

## 2 வாரங்களுக்குள் தீர்வின்றேல் போர்

### தேரர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.20

மாலபே தனியார் மருத்துவக்கல்லூரி தொடர்பில் எதிர்வரும் இரு வாரங்களுள் உரிய தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். அவ்வாறில்லையேல் மக்களுடன் இணைந்து பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் எச்சரித்துள்ளார்.

பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் பெற்றார் சிலர் நேற்று அவரைச் சந்தித்திருந்த போது, அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். இந்த விடயத்துக்கு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஆ)

## சட்டத்தரணிகள் நிலைப்பாடு; திங்கள் அறிவிப்பு

கொழும்பு , ஒக்.20

புதிய அரசியலமைப்பு முன்மொழிவு சம்பந்தமாக சட்டத்தரணிகளின் கருத்துக்களை பெறுவதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் விஷேட பொதுக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெற உள்ளது. அந்த விஷேட பொதுக் குழுக் கூட்டம் குறித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாக அந்தச் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி யூ. ஆர். டி சில்வா கூறினார். புதிய அரசியலமைப்பு முன்மொழிவின் வரைவு மும்மொழிகளிலும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு கிடைத்திருப்பதாகவும், அதன் உள்ளடக்கங்கள் சம்பந்தமாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிலைப்பாடு அந்தப் பொதுக் குழுக் கூட்டத்தின் பின்னர் அறிவிக்கப்படும் என்று சட்டத்தரணி யூ. ஆர். டி சில்வா கூறினார். (உ)

## கட்டாருக்கு போகிறார் மைத்திரி

கொழும்பு, ஒக்.20

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்டாருக்குப் பயணம் செய்யவுள்ளார். மூன்று நாள்களைக் கொண்ட பயணத் திட்டத்தின்படி, ஜனாதிபதி அடுத்த வாரம் கட்டாருக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளார். இதன் போது, சக்தி வளம், இராஜதந்திர பயிற்சி, ஆய்வு மற்றும் நீர் வழங்கல், வடிகாலமைப்பு ஆகிய விடயங்கள் தொடர்பில் கட்டாருடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

எதிர்வரும் 24, 25 மற்றும் 26ஆம் திகதிகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்டாருக்கு பயணமாவதுடன், அவருடன் சில அமைச்சர்களும் இணைந்து கொள்ளவுள்ளனர். (ஆ)

## இன்று நள்ளிரவு முதல் ரயில்வே வேலைநிறுத்தம்

கொழும்பு, ஒக்.20

ரயில்வே நடவடிக்கைகள் மேற்பார்வைச் சங்கமும், இலங்கை ரயில்வே காப்பாளர்கள் சங்கமும், காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டமொன்றை, இன்று நள்ளிரவு முதல் ஆரம்பிக்கவுள்ளதாக எச்சரித்துள்ளன. அவர்களது சம்பள உயர்வு சம்பந்தமாக எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தே, இவ்வெச்சரிக்கையை விடுத்துள்ளன. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ரயில்வே நடவடிக்கைகள் மேற்பார்வைச் சங்கத்தின் ஏற்பாட்டாளர் லால் ஆரியரத்ன, சம்பளங்களை உயர்த்துவது தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்ட பணிப்புரைகளை, தேசிய ஊதிய மற்றும் பதவியணிகள் ஆணைக்குழு பின்பற்றவில்லை என்று குற்றஞ்சாட்டினார். செப்டெம்பர் 20ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் வரையில், ஒரு மாதகாலத்துக்குள் ஊதிய உயர்வை வழங்குமாறு, பதவியணி ஆணைக்குழுவிடம் கோரப்பட்டிருந்தது. அதற்கான காலக்கெடு, 20ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் (நேற்றுடன்) நிறைவடைகின்றது என்றும் தெரிவித்தார். (உ)

## 2 சட்டங்களா?

கொழும்பு, ஒக்.20

நாட்டில் இரண்டு சட்டங்கள் நடைமுறையில் இருப்பதாக பரவப்பட்டும் செய்திகளில் உண்மையில்லை என்று பாதுகாப்பு செயலாளர் கபில வைத்யரத்ன தெரிவித்துள்ளார். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தற்போதுவரை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை தலதா மாளிகைக்குச் சென்று வணக்க வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், சிலர் பார்க்கும் விதம் மற்றும் வரைவிலக்கணப்படுத்தும் விதம் காரணமாக இதுபோன்ற தவறான கருத்துக்கள் சமூகமயப்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார். தற்போது நாட்டில் இருப்பது ஒரு சட்டமே என்றும், அது சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் பாதுகாப்பு செயலாளர் கபில வைத்யரத்ன கூறினார். (உ)

## 2020 வரை தேர்தல் நடக்காது

கொழும்பு,ஒக்.20

2020ஆம் ஆண்டு வரை எந்த தேர்தலையும் இந்த அரசாங்கம் நடத்தாது. இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு விட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், "உள்ளூராட்சி மற்றும் மாநகரசபை தேர்தல் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறும் என அரசாங்கம் அறிவித்துள்ள போதும், குறித்த தேர்தல் 2020ஆம் அண்டிலேயே நடைபெறும். அம்பகமுவ பிரதேசத்திற்கு புதிய பிரதேச சபைகளை நிறுவ வேண்டும் என மனோ கணேசன் வழக்கு தொடர்கின்றார். அவருடைய வழக்கிற்கு பிறகு மற்றுமொருவர் வழக்கு தொடர்வார். இவ்வாறு ஒருவருக்குப்பின் ஒருவராக மூன்று வழக்குகளை தாக்கல் செய்வதற்கு அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 2020 வரை தேர்தல் நடைபெறாது. எதிர்வரும் 2018ஆம் ஆண்டு ஜனவரியில் தேர்தல் நடைபெறாவிட்டால் நாம் அனைவரும் கொழும்பிற்கு படையெடுத்து வந்து, பாரிய போராட்டத்தை நடத்துவோம்" - என்றார். (எ)

## என்னைப் படுகொலை செய்வதற்குச் சதி

### அமைச்சர் அமரவீர தகவல்



கொழும்பு,ஒக்.20

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மஹிந்த அமரவீரவை, அரசியல் மற்றும் தனிப்பட்ட வகையில் படுகொலை செய்வதற்கு திட்டமிட்டுள்ளமை தொடர்பில் தகவல்கள் வெளிவந்துள்ளன.

தன்னைப் படுகொலை செய்ய சில குழுக்கள் சில தடவைகள் மேற்கொண்ட சூழ்ச்சிகள் தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். மகாவலி அபிவிருத்தி பிரதியமைச்சரான ... தினத்திலிருந்து இதற்கான சூழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தம்மை உயர் நிலையில் மதிப்பிட்டுள்ளதால் இந்தச் சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத இரண்டு சிறு கட்சிகளின் இளம் உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழு அன்றைய தினத்திற்கு மறுநாள் முக்கிய அரசியல்வாதி ஒருவரின் வீட்டில் கூடி தம்மை படுகொலை செய்வதற்கான திட்டத்தை தயாரித்துள்ளதாக ... கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

## யாழ். இந்துவின் பரிசுத் தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசுத்தினம் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 09 மணிக்கு நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் எல்லை மீள் நிர்ணயக் குழுவின் தலைவர் க.தவலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
வெள்ளி. 20 ஒக்ரோபர் 2017 ethirolijaffna@gmail.com

# எட்ட வருகையிலேயே திட்டமிடல்

ஆறு பெருகிய பின்னர் அணை கட்டுவதுதான் செம்மனச் செல்வி காலத்தில் இருந்து இன்று வரை நம்மிடையே உள்ள பழக்கம். சில அபாய அறிகுறிகள் முன்னரே தென்பட்டாலும் கூட 'திட்டம் இருக்கு. கிட்ட வரட்டும்' என்ற பாணியில் அலட்சியமாக இருப்பதன் விளைவுகளைக் கடந்த காலங்களில் பலமுறை பட்டுணர்ந்திருக்கிறோம். அதிலும் குறிப்பாக சுகாதார விடயங்களில் இந்த அலட்சியம் சாதாரண மக்களிடம் மாத்திரமல்லாமல் பொறுப்பு வாய்ந்தவர்களிடமும் நிலவியே வந்தது வருகின்றது.

மழை வரும் முன்னே, டெங்கு வரும் பின்னே என்பது சிறுகுழந்தைக்குக் கூடத் தெரியும். ஆனால் அவை சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளுக்குத் தெரிவதில்லை. மழை பெய்து, டெங்கு நுளம்புகள் முட்டையிட்டுப் பெருகி, நூற்றுக்கணக்கானோருக்கு நோயைப் பரப்பி, அவர்களில் ஒரு சிலர் உயிரிழந்த பின்னர் தான் சுகாதாரத் துறையினருக்குச் சுரணை வரும். பின்னர் விழிப்புணர்வு, சுத்திகரிப்பு, வீட்டுத் தரிசனம் என்ற ஆயிரத்தெட்டுத் திட்டங்களோடு களமிறங்குவார்கள். அதற்கிடையில் இன்னும் சில உயிர்கள் பறிபோயிருக்கும். கிட்டத்தட்ட மழை ஓயும் தறுவாயில் தான், இவர்களின் திட்டங்கள் முற்றுமுழுதாக நடைமுறைக்கு வந்திருக்கும். தனியே சுகாதாரத் துறையினர் மட்டும் தான் டெங்கு ஒழிப்பில் அக்கறை கொள்ள வேண்டுமா? ஒவ்வொரு குடிமகனும் டெங்கு பரவாச் சூழலைப் பேணினாலே அதனை முளையிலேயே கட்டுப் படுத்தி விடலாம் தான். ஆனால் அப்படி அக்கறையுள்ளவர்களாக நாமிருந்தால் சுகாதாரத்துறையே தேவையில்லையே. மக்களின் சுகாதாரத்தைப் பேணத்தானே சுகாதாரத்துறை.

சில சமயங்களில் மக்களின் சுகாதார நிலையை விடவும் தம்நலனுக்கே சுகாதாரத்துறையினர் அதிக முக்கியத்துவம் கொடுக்கும் சம்பவங்களும் பலமுறை நடந்துள்ளன. அண்மையில் கூட இடமாற்ற விடயம் தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட பணிசெய்யாப் போராட்டத்தின் போது, சுகாதாரச் சீர்கேடான பல விடயங்களை உணவகங்களிலும், வேறு சில இடங்களிலும் அவதானித்தும்கூட அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சில உணவு கையாளும் நிலையங்களில் இதுதான் சந்தர்ப்பமென்று , கழித்து வைத்த உணவுகளைக் கூட இந்தப் பணிசெய்யாப் போராட்டக் காலத்தில் மக்களின் தலையில் கட்டிய சம்பவங்களும் நடந்துள்ளன. ஆனால் தங்கள் பிரச்சினைக்கு முன்னால் மக்களின் பொதுப் பிரச்சினை முக்கியமானதல்ல என்பது போலவே சுகாதாரப் பரிசோதகர்கள் அந்தக் காலப் பகுதியில் நடந்து கொண்டிருந்தனர்.

இப்படிப்பட்ட சுகாதாரத்துறைக்குப் பொறுப்பான வட மாகாண அமைச்சரிடமிருந்து வந்துள்ள ஒரு அறிவிப்பு விழிகளை ஆச்சரியத்தில் விரியவைத்துள்ளது. " வடக்கில் மலேரியா பரவுவதைத் தடுக்க, அடையாப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் அவசரகாலச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது" என்பதுதான் வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஞா.குணசீலனின் அறிவிப்பு. தற்போது எவருக்குமே மலேரியா நோய்த் தொற்றில்லாத சூழலில், இலங்கையில் இருந்தே மலேரியாவை விரட்டிவிட்டதாக அரசு மார்தட்டும் நிலையில், இப்படி ஒரு அறிவிப்பை அமைச்சர் விட என்ன காரணம்?

சில மாதங்களுக்கு முன்னர் மன்னாரிலுள்ள போசாலை, தலைமன்னார் ஆகிய பகுதிகளில் மலேரியாவினைப் பரப்பும் அனோபிலிஸ் ஸ்ரபக்சி என்ற நுளம்பு கண்டு பிடிக்கப்பட்டிருந்தது . இந்தியாவில் வரும் மீனவர்களின் படகுகள் மூலம் இவை மன்னார்க் கரையை அடைந்திருக்கலாம் என நம்பப்பட்டது. அந்த நுளம்புகள் மன்னாருடன் தமது பரவுதலை நிறுத்துவிடும் எனக் கருதப்பட்ட சூழலில் வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களிலும் மலேரியா நுளம்புகள் தமது கிளைகளைத் திறந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதைக் கவனிக்காமல் விட்டிருந்தால், டெங்குவைப் போல பலமடங்கு பாதிப்பு மலேரியாவால் வடக்கில் ஏற்பட்டிருக்கும். ஆனால் வழக்கமாகக் கால்மாட்டில் நெருப்பு வந்த பின்னரே தண்ணீரைத் தேடி ஓடாமல், இம்முறை ஆரம்பத்திலேயே மலேரியவைக் கட்டுப்படுத்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சும், திணைக்களமும் அவசர நடவடிக்கையில் இறங்கியிருப்பது பாராட்டுக்குரியதொன்று. வெறுமனே அறிவிப்போடு மாத்திரம் நின்றுவிடாமல் அதைச் செயலிலும் காட்டி, இனிமேல் ஆபத்துக்கள் 'எட்ட வருகையிலேயே திட்டத்தை நடைமுறைப்படுத்தும்' முறைமைக்கு மாற முனைய வேண்டும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# பணப்பறிப்புக் கும்பல் வவுனியாவில் அட்டகாசம்

வவுனியா, ஒக்.20

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் வர்த்தகர்களிடம்இளைஞர்குழுவொன்று மிரட்டிப் பணம் பறித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலை வேளையில் மதுபோதையில் வரும் குறித்த இளைஞர் குழு, அந்தப் பகுதியில்உள்ள வர்த்தகர்களிடம்பணம் கேட்பதாகவும், வர்த்தகர்கள் பணம் தர மறுக்கும் பட்சத்தில் அவர்களுடன் தகராறில் ஈடுபடுவதாகவும் பாதிக்கப் பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

சில நாட்களுக்கு முன்னர், இந்தக் குழு வர்த்தகர் ஒருவரிடம் அச்சுறுத்திப் பணம் கறக்க முற்பட்டபோது, அவர் பொலிஸாருக்கு அது குறித்து அறிவித்தார். இதனையடுத்து அந்தப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இதனால் சிலநாட்கள் அடங்கியிருந்த இந்தப் பணப்பறிப்பு, மீண்டும் ஆரம்பித்துள்ளதாகவும், வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அண்மையில் அந்தக் குழுவானது பணம் வழங்க மறுத்த வர்த்தகரொருவருடன் தகராறில் ஈடுபட்ட நிலையில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் அப்பகுதியில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர். இதன் காரணமாக சில நாட்களாக பணம் பறிக்கும் செயற்பாட்டை நிறுத்தியிருந்த இளைஞர் குழுவானது தற்போது மீண்டும் தமது கைவரிசையை காட்டத்தொடங்கியுள்ளதாகவும், இதனால் மக்கள் நடமாட்டம் குறையும் வேளையில் தாம் கடைகளை மூட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.(ஆ)

## சிவனொளிபாதமலையில்
# குப்பைமேடு சரிவு: பாதை துண்டிப்பு



கொழும்பு, ஒக்.20

சிவனொளிபாதமலை, மாகிரிதம்ப பகுதியில் உள்ள குப்பைமேடு நேற்றுமுன்தினம் சரிந்து வீழ்ந்துள்ளது. இதனால் சிவனொளிபாதமலைக்குச் செல்லும் நடைபாதையும், பாதையோரமிருந்த பாதுகாப்பு இரும்பு வேலியும் சேதமடைந்துள்ளன.

பருவகாலத்தில் மலையுச்சிக்குச் செல்லும் யாத்திரிகர்களினால் எறியப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்கள் போன்ற கழிவுகளைச் சேகரித்து வைக்கப்பட்டிருந்த குப்பைமேடே இவ்வாறு சரிந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த சில நாட்களாகத் தொடர்ச்சியாகப் பெய்து வந்த அடை மழையினால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த கழிவுகளை அகற்ற முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. அதிகளவான கழிவுகள் தேங்கியதாலேயே மழை வெள்ளத்தால் சரிந்துள்ளது. இதனை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக சிவனொளி பாதமலை நாயக்க தேரர் தெரிவித்துள்ளார். (ஆ)

# கைக்கெட்டியும் கதவு எட்டவில்லை
## திருடர்கள் ஏமாற்றம்

சாவகச்சேரி, ஒக்.20

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு , கடை ஒன்றை உடைத்து திருடுவதற்கு எடுத்த முயற்சி, கைகூடாததால் திருடர்கள் ஏமாற்றத்துடன் தப்பிச் சென்றனர்.

குறித்த கடையின் பின்பக்க ஜன்னல் கண்ணாடியை உடைத்து அதன் மூலம் கதவை உடைக்கத் திருடர்கள் முயன்றுள்ளனர். ஆனாலும் அவர்களால் அந்தக் கதவைத் திறக்க முடியவில்லை. நீண்டநேரம் அங்கே நின்றால் பிடிபட்டு விடக்கூடும் என்ற பயத்தில் அவர்கள் அங்கிருந்து ஏமாற்றத் துடன் நழுவிச் சென்றுள்ளனர். அடுத்த நாள் கடையத் திறந்த போதே திருட்டு முயற்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# 65 வயதில் இளைஞர்: வெடிக்கிறது சர்ச்சை




கொழும்பு, ஒக்.20

ரஷ்யாவில் நடைபெற்று வரும் தேசிய இளைஞர் மாநாட்டில் இலங்கை சார்பில் கலந்து கொண்ட 65 வயது இளைஞரைப் பற்றிய சர்ச்சைகள் கொழும்பில் எழுந்துள்ளன.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்ற இலங்கை சார்பான பிரதிநிதிகளுள் 65 வயதுடைய பிரதிநிதி ஒருவரும் அடங்கியுள்ளார்.

சுய தொழில் வேலை வாய்ப்புச் சங்கத்தின் தலைவரான மஹிந்த கஹதகமகே என்பவரே இவ்வாறு இளைஞராக மாறி, ரஷ்யாவுக்குச் சென்றுள்ளார். ஆயினும் கஹதகமகே ரஷ்யா சென்றமை தொடர்பான தகவல் உண்மைக்கு புறம்பானது என அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்து. எனினும் ரஷ்ய சென்ற கஹதகமகே சும்மயிருக்காமல், தன் செல போனில் ரஷ்ய இளசுகளோடு இணைந்து பேஸ்புக்கில் பதிவிட்ட புகைப்படங்கள் அவர் ரஷ்யா சென்றதை உறுதிப்படுத்தியுள்ளன. இது குறித்து பல இளைஞர் அமைப்புகள் அரசுக்கு எதிரான கருத்துக்களைப் பதிவிட்டுள்ளன. (ஆ)



# மர்மப் பொருள் விண்கல்லா?

கொழும்பு, ஒக்.20

நாட்டின் தென் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் வீழ்ந்த மர்மப் பொருள் விண்கல்லாக இருக்கலாம் என கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விண்வெளிப் பிரிவின் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

"விண்கல் விழுந்தமைக்கான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை . இவ்வாறு விழுந்ததாகக் கூறப்படுகின்ற விண்கற்களின் பாகங்கள் பூமியின் மேற்பரப்பில் தென்படும் பட்சத்தில் அதனைத் தொடுவதற்கு எவரும் முயற்சிக்க வேண்டாம். அவ்வாறான பாகங்கள் காணப்படும் பட்சத்தில் அதற்கு நீர் படாத வண்ணம் ஏதேனும் பிளாஸ்டிக் பொருளைக் கொண்டு மூடுங்கள்" என்றும் பேராசிரியர் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். (ஆ)

## இன்று நாளும் கோளும்

20.10.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 03 ஆம் நாள்

பிரதமை பி.இ. 01.28 வரை | சித்திரை மு.ப. 9.18 மணி வரை | சித்தயோகம் கந்தசட்டி விரத ஆரம்பம்

இராகுகாலம் 10.32 - 12.02 | சுபநேரம் 06.02 - 07.32 | எமகண்டம் 03.02 - 04.32

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏமாற்றம் | நட்பு | சுகம் | ஆதாயம் | தாமதம் | விருப்பம் | தடை | தேர்ச்சி | அலைச்சல் | வெற்றி | நன்மை | பக்தி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசிலில் தோற்றோரே பல்கலைக்குத் தெரிவாகின்றனர்!

## கொழும்புப் பல்கலைக்கழக ஆய்வில் முடிவு



கொழும்பு, ஒக்.20
தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவ, மாணவிகளே அதிகள வில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகின்றனர் என தென் மாகாண முதலமைச்சர் சான் விஜயலால் டி சில்வா தெரிவித் துள்ளார்.

பாடசாலையொன்றின் பரி சளிப்பு நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர் தொகையை விடவும் சித்தி அடையாத மாணவர் தொகை அதிகமானது. பரீட்சைத் திணைக் களத்தினால் நடத்தப்படும் முக்கியமான பரீட் சைகளில் ஒன்றே புலமைப் பரிசில் பரீட்சை. புலமைப் பரிசில் பரீட்சைக்காகப் பெற்றோர் அதிக சிரத்தை எடுத்துக் கொள்கின்றனர். எனினும் புலமைப் பரிசில் பரீட்சையின் பின்னர் அவ்வாறு கவனம் செலுத் துவதில்லை. பிள்ளைகளின் கல்வியில் எப்போதும் பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத காரணத்தினால் மாணவர்கள் தைரியத்தை இழந்து விடக் கூடாது. புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவ, மாணவியரே சாதாரண தரம், உயர்தரம் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஜொலிக்கின்றனர். கொழும்புப் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வின் போது புலமைப் பரிசில் பரீட்சையில் தோல் வியடைந்த மாணவ, மாணவியரே அதிகளவில் பல் கலைக்கழகத்திற்குத் தெரிவாகின்றனர் எனவும் தெரிய வந்துள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.





# வாய்ப் பூட்டு எனக்கில்லை

கொழும்பு, ஒக்.20
"மகிந்த ராஜபக்ச பற்றி வாய் திறக்க வேண்டாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவு எதனையும் எனக்குப் பிறப்பிக்க வில்லை" என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித் துள்ளார். மகிந்த பற்றி எந்தக் கருத்தையும் தெரிவிக்கக் கூடாது என மைத்திரி கட்டளையிட்டுள்ள தாக சில ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பிலேயே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

" மகிந்த ராஜபக்ச தொடர்பிலும், கட்சியின் ஒழுக்க விதிகளை மீறும் ஏனைய உறுப்பினர்கள் தொடர்பி லும் அறிக்கைகளையோ, கருத் தையோ வெளியிட வேண்டாம் என ஜனாதிபதி எனக்கு உத்தர விடவில்லை. இது தொடர்பில் ஊடகங்களில் வெளியிடப்பட்டு வரும் செய்திகளில் உண்மை யில்லை. கட்சியின் யாப்பு விதிக ளுக்கு அமையவே கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகை யில் கருத்து வெளியிட்டு வருகின் றேன். கட்சியின்பொதுச் செயலா ளர் என்ற அடிப்படையில் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனை வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்கின்றேன். நாட்டில் ஜன நாயகம் நிலைநாட்டப்பட்டுள்ள நிலையில், சந்தர்ப்பவாதிகள் போலிப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்" என துமிந்த திஸா நாயக்க தெரிவித்துள்ளார். (ஆ)

# மத்தல யாருக்கு? இன்னும் முடிவில்லை

கொழும்பு, ஒக்.20
மத்தல விமான நிலை யம் தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எதனையும் மேற்கொள் ளவில்லை என்று அரசாங் கம் தெரிவித்துள்ளது.

"குறித்த விமான நிலையத்துக்கு தனியார் முதலீடு அவசியம் என்று அமைச்சரவை தீர்மா னித்துள்ளது. ஆனாலும் இதனைப் பிறிதொரு நாட்டுக்கு வழங்குவதா? என்பது தொடர்பில் இன் னும் இறுதித் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை" என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள் ளார். மத்தல விமான நிலையம் இந்தியாவுக்கு வழங்கப்பட இருப் பதாகத் தெரிவித்து, அதற்கு எதிராக மகிந்த அணியினர் அண்மையில் அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்தி இருந்தமை குறிப்பிடத் தக்கது. (அ)

# தங்கக் கடத்தலாளி கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு, ஒக்.20
ஐந்து கிலோவுக்கும் அதிக நிறையுடைய தங்க ஆபரணங்களைக் கடத்தி வந்தவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவு அதிகாரிகளால் நேற்று அதிகாலை 4 மணிய ளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தில் பணியாற்றும், 50 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸூக்குச் சொந்தமான யூ.எல். 282 என்ற விமானத்தில் ஜித்தாவிலிருந்து வந்தபோதே அவர்கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து சுமார் 5.3 கிலோகிராம் நிறையுடைய தங்க ஆபரணங்கள் கண்டுபிடிக் கப்பட்டன. அவற்றின் இலங்கைப் பெறுமதி சுமார் 26 மில்லியன் ரூபா என்று மதிப்பிடப்பட் டுள்ளது. (ஆ)

# பட்டாசு விளையாடிய சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.20
லிந்துலை , பெரிய மட்டுக்கல பகுதியில் பட்டாசுகளை வெடித்து நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன், திடீரென மயக்கமடைந்து நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார். பெரிய மட்டுக்கல பகுதியை சேர்ந்த 9 வயதுடைய முத்துக் குமார் சஜீவன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

எனினும் அவர் உயிரிழந்தமைக்கான கார ணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (அ)

## மைத்திரியை வீழ்த்துவோம்

# ஜே.வி.பி. சபதம்

கொழும்பு, ஒக்.20
அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட் டியிடுவதற்கான தார்மீக உரிமை, ஜனா திபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடையாது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு மாறாக, அடுத்த தேர்த லில் அவர் போட்டியிட்டால், முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை வீழ்த்தியமை போன்று, மைத்திரியையும் வீழ்த்துவோம் என ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்ட அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், கட்சியின் இந்த நிலைப்பாட்டை வெளிப் படுத்தினார்.

"இன்னொரு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டேன் என்று ஜனா திபதி சிறிசேன, வண. சோபித தேரரின் இறுதிக் கிரியையின் போது மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார். சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்னவாகவும் இருக்கலாம், ஜனாதிபதி சிறிசேன, இன்னொரு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான தார்மீக உரிமையைக் கொண்டிருக்கவில்லை. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை, அவர் கடைப்பிடிக்க வேண்டும்" என்று அவர் தெரிவித்தார். (ஆ)

# பகல் கொள்ளை பாவம் பெடி, பெட்டையள்!

காலைமை என்ரை வேலையெல்லாத்தையும் முடிச்சுப்போட்டு 10 மணி இருக்கும் முத்தத்திலை கிடந்த சாக்குக் கட்டிலிலை படுத்து கொஞ்சம் ஆறுவமெண்டு அஞ்சு நிமிசம் கண்ணயர்ந்தன். 'படார்....படார்" எண்டு படலையைத் தட்டு சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழும்பிப் பாத்தன்.

ஒரு பெடியும், பெட்டையும் படலைக்குள்ளை பயணம் போற ஆக்கள் மாதிரி பெட்டி படுக்கை ளோடை நிக்கினம். எனக்குப் பயம் வந்திட்டிது. ஏனெண்டால் இடப்பெயர்வுக்குப் பிறகு எங்களுக்குச் சினேகிதம் கனக்க. அவை ஆற்றை யேன் பிள்ளையள்தான் களவாய் ஓடி அடைக் கலத்துக்கு வந்திட்டுதுகளோ எண்டு யோசிச்சுக் கொண்டு "வா...ங்கோ..." எண்டன். ரவுசர், சேட்டோடை கழுத்திலை ரை கட்டிக் கொண்டு ஒரு பெடியனும், என்ரை பேத்தி வைச்சு விளை யாடுற 'பாபி டோல்' பாவைப் பிள்ளைக்குப் போட்டிருக்கிற சட்டையைப்போல ஒரு சட்டை யைப் போட்டுக் கொண்டு பொம்பிளைப் பிள்ளையும் வீட்டுக்கை வந்தினம். இரண்டு பேருக்கும் வயசு இருபதைத் தாண்டாது.

வந்து நிண்டினம். "இருங்கோ" எண்டு வாங் கில காட்டினன். இருந்துட்டு " கொஞ்சந் தண்ணி தருவியளோ?" எண்டு கேட்டினம். முத்தத்தில பூக்கண்டுக்கை இருந்த பைப்பைக் காட்டினன். வந்த "விசயத்தைச் சொல்லுங்கோ" எண்டன். கையிலை வச்சிருந்த பாக்கை எடுத்து திறந்து ஒரு ரேடியாப் பெட்டியை எடுத்து இது "4 இன் வண். கடையிலை 1500 ரூபா. ஆனால் நாங்கள் ஒரு விசேட விலையிலை 1000 க்குத் தாறம்" எண்டு சொல்லிச்சினம். அதைப் போல 4 - 5 சமான்களை எடுத்து ஒவ்வொண்டா விலா வாரியா விளக்கிச்சினம். ஒண்டும் எங்களுக்கு அவசியமில்லாத சாமான்கள். உடனை வீட்டுக்கை போய் அதே மாதிரி தம்பி கொழும்பிலை வாங்கிக் கொண்டு வந்த ரேடியோவைக் காட்டி னன். அதை வாங்கின விலை 500 எண்டு சொன் னன். எழும்பி நைஸா மாறிட்டினம்.

இது போலை கனகதையள் உந்த இளம் வியாபாரியளைப் பற்றிச் சொல்லலாம். கை நிறையக் காசு உழைக்கலாம் எண்டு விளம்பரப் படுத்தி உவையளை வேலைக்கெடுத்து இது மாதிரிச் சாமான்களையும் குடுத்து ஊர் மனைக் குள்ளை அனுப்பி சனங்களை ஏமாத்தி இப்பிடிக் கொள்ளையடிக்கிறதுக்குப் பின்னாலை பெரிய கொம்பனியள்தான் நிக்குது. இதை எனக்குக் கச்சேரியிலை வேலை செய்யிற கதிர்காமு தான் சொன்னவன்.

இது போல மழைக்காலத்திலை செட்டி அட்டை திரியிறமாதிரி கனக்கத் திரியுதுகளாம். நல்ல வழியிலை உழைக்கக் காட்டிக் குடுக்க ஒருத்தரு மில்லை. இது மாதிரிக் கொள்ளை அடிக்கவும், ஏமாத்திப் பிழைக்கவும் காட்டிக் குடுக்கிற ஆக்கள்தான் கனக்கவாக் கிடக்கு. அதைத் திட்டமிட்டுக் கொம்பனியள் செய்யிறதுதான் தாங்கேலாமைக் கிடக்கு.

என்ரை உடன் பிறப்புக்களே! கவனம்.

● வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொறுப்பதிகாரியைப் புரட்டிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, ஒக்.20
தென் மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர், பதுளை பொலிஸ் கணினிப் பிரிவின் பொறுப்பதிகாரியைக் கீழே தள்ளிக் கடுமையாகத் தாக்கிய விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேங்க் பெர்னாண்டோவினால் மேற் கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலுக்கான காரணம் இன்னமும் வெளியாகவில்லை. "நாம் இவர்களை கால் பந்தை போன்று கீழே வைத்து அடிக்க முடியும்" என பிரதிப் பொலிஸ் மா அதிபர் தனது சாரதியிடம் இந்தத் தாக்குதல் குறித்துத் தெரிவித்துள்ளார். இதேவேளை, சில மாதங்களுக்கு முன்னர் பொலிஸ்மா அதிபரினால் பொலிஸ் தலைமையக 'லிப்ட்' செயற்பாட்டாளர் தாக்கப்பட்டார். எனினும் அதற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.இதனால்பிரதிப்பொலிஸ் மாஅதிபரும்பொலிஸ்மாஅதிபர்போன்று பொலிஸ் அதிகாரிகளை தாக்க ஆரம்பித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.(ஆ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**1982.10.20**

இலங்கையில் முதன் முதலில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வெற்றி பெற்றார்.

## ஜே.ஆரின் பேரன் குதிக்கிறார் அரசியலில்



கொழும்பு - ஒக்.20
இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பேரன், பிரதீப் ஜெயவர்த்தன அரசியலில் குதிக்கவுள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. விரைவில் கொழும்பில் நடத்தவுள்ள செய்தியாளர் சந்திப்பில் அரசியலில் நுழையும் தமது முடிவை அவர் அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பையும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையையும் அறிமுகப்படுத்திய ஜே.ஆர்.ஜெயவர்த்தன, 1978ஆம் ஆண்டு தொடக்கம், 1989ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாகப் பதவியில் இருந்தவர். ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் மகனான ரவி ஜெயவர்த்தனவின் மகனே பிரதீப் ஜெயவர்த்தன ஆவார். (உ)

# ஊழல் அறிக்கை இறுதிக் கட்டத்தில்

கொழும்பு,ஒக்.20
பாரிய ஊழல் மோசடிகள் சம்பந்தமாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகளைத் தயாரிக்கும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. 17 விசாரணை அறிக்கைகளைத் தயார்படுத்திக் கொண்டிருப்பதாக அதன் பேச்சாளர் ஒருவர் கூறினார். பாரிய ஊழல் மோசடிகள் சம்பந்தமாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கால எல்லை கடந்த செப்ரெம்பர் மாதம் 03 ஆம் திகதி நிறைவடைந்த போதிலும், அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக மேலும் இரண்டு மாத கால அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனினும் அந்தக் கால எல்லை நவம்பர் மாதம் முதலாவது வாரத்துடன் நிறைவடைகிறது. இந்தக் காலப் பகுதிக்குள் அனைத்து விசாரணை அறிக்கைகளையும் இறுதி செய்வதற்கு எதிர்பார்ப்பதாக பாரிய ஊழல் மோசடிகள் சம்பந்தமாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு கூறியுள்ளது. (உ)

# 3,760 வீடுகளுக்கு உறுதிப்பத்திரம்

கொழும்பு,ஒக்.20
பெருந்தோட்டத்துறை மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள 3760 வீடுகளுக்கு உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மலையகப் புதிய கிராமம் மற்றும் அடிப்படை வசதிகள் மற்றும் சமூக அபிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் இதுதொடர்பாக சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஹறித்த ரன் என்ற வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் இந்த வருடத்தில் நிர்மாணிக்கப்பட்ட 2,551 வீடுகளுக்கும், இந்த வருடத்தில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இந்தியாவின் நன்கொடையின் கீழ் முதற் கட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 1,134 வீடுகளுக்கும், 2015இல் இயற்கை அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த நபர்களுக்காக மீரியபெத்த வீடமைப்புத் திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 75 வீடுகளுக்கும் இந்தக் காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன. (உ)

# தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை



கொழும்பு, ஒக்.20
இலங்கையில் 2020ஆம் ஆண்டளவில் தொற்றாநோய்களின் மூன்றில் ஒரு பகுதியைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். உலக சுகாதார ஸ்தாபனம் ஜேர்மன் பேர்லினில் நடத்திய மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார். இந்த மாநாடு கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை நடைபெற்றது. தொற்றாநோய்களின் காரணமாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுவோரில் 60 சதவீதமானோர் உயிரிழக்கின்றனர் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (உ)

## விவசாயிகளுக்கு புதிய காப்புறுதி



கொழும்பு,ஒக்.20
விவசாயிகளுக்கு புதிய விவசாயக் காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்த விவசாய அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பான ஆலோசனை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அமைச்சின் செயலாளர் வி.விஜயரத்ன தெரிவித்தார்.
"இதற்கான பணிகளை மேற்கொள்வதற்கு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புத்திஜீவிகளிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள விவசாயக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபா மாத்திரமே இழப்பீடு வழங்கப்படுகிறது. இதற்காக 150 ரூபா வீதம் தவணைக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. புதிய காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டயருக்கு 40 ஆயிரம் ரூபாவை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 1300 ரூபா வீதம் தவணைக் கட்டணம் செலுத்த வேண்டும். இதில் 675 ரூபாவை தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியம் செலுத்தும். எஞ்சியுள்ள 675 ரூபா தொகையை குறிப்பிட்ட விவசாயிகளிடமிருந்து அறவிடத் திட்டமிடப்பட்டுள்ளது " என்று அமைச்சின் செயலாளர் வி.விஜயரத்ன தெரிவித்தார். (உ)

## கேகாலைக் காட்டுக்குள் போர்த்துக்கேயர் கட்டடம்



கொழும்பு,ஒக்.20
போத்துக்கேயர் காலக் கட்டடம் ஒன்று , கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிற்ற தொகுதியில் பனாவல மடகம்மான என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இந்தப் பிரதேசத்தில் உள்ள காட்டுப்பகுதியில் இது தொடர்பாகப் பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் இது கண்டுபிடிக்கப்பட்டதாகப் பிராந்திய தொல்பொருள் பணிப்பாளர் பி.மண்டவெல தெரிவித்தார். 1515 - 1540ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட சீத்தாவக்கபுர காலப்பகுதியில் சப்ரகமுவ பிரதேசத்தைக் கண்காணிப்பதற்காக இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டிருக்கக்கூடும் என்று ஊகிக்கப்படுகின்றது. (உ)

## வாழையிலைக் கண்காட்சி



கொழும்பு ,ஒக்.20
பொலித்தீன் பாவனைக்குப் பதிலாக வாழையிலைகளை அவித்துப் பயன்படுத்தும் முறைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் கண்காட்சி கொழும்பில் இடம் பெற்றுள்ளது.
இராணுவத்தினரின் தலைமையில் கடந்த 16 மற்றும் 17ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார். அவித்த வாழையிலைகளை பொலித்தீனுக்குப் பதிலாகப் பயன்படுத்துவதன் மூலம் பொலித்தீன் பாவனையைத் தவிர்ப்பதோடு, அவித்த வாழையிலைகளை மூன்று மாதங்களுக்கு மேலாக உபயோகிக்க முடியும் என்றும் இராணுவத்தினர் இந்தக் கண்காட்சியில் செய்முறை மூலம் விளக்கியுள்ளனர்.
இதன் போது உணவைப் பொதி செய்யும் பின்னப்பட்ட ஓலைப் பெட்டியும் இந்த நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டதோடு, மேலும் இராணுவத்தினர் இலவசமாக இந்த வாழையிலைகளை பொது மக்களின் பாவனைக்காக வழங்கினர். (உ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# பண மதிப்பு நீக்கம் அவசரப்பட்டுவிட்டேன்

## கமல் வருத்தம்

சென்னை, ஒக்.20

பணமதிப்பு நீக்கத்தை அவசரப்பட்டு ஆதரித்தமைக்கு வருந்துவதாக நடிகர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார். மேலும், பணமதிப்பு நீக்கம் தவறென்பதைப் பிரதமர் மோடி ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். ஆனந்த விகடனில் எழுதிவரும் பத்தியில் கமல்ஹாசன் இதனைத் தெரிவித்துள்ளார். அந்தப் பத்தியில், “பணமதிப்பு நீக்க நடவடிக்கையை அவசரப்பட்டு ஆதரித்தமைக்கு வருந்துகிறேன். பணமதிப்பு நீக்கம் தவறென்பதை பிடிவாதம் காட்டாமல் பிரதமர் நரேந்திர மோடி ஒப்புக்கொள்ள வேண்டும். அவ்வாறாக அவர் ஒப்புக்கொண்டால் நான் அவருக்கு எனது வணக்கத்தை தெரிவிப்பேன்” என கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.




# வடகொரியா குறிவைக்கும் நாடுகள்

வடகொரியா,ஒக்.20

வடகொரியா அதன் அண்டை நாடுகளின் முக்கிய நகரங்களையும் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா நாடுகளையும் குறிவைத்து தமது ஏவுகணைப் பலத்தை அதிகரித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.கிம் பரம்பரையில் சக்தி வாய்ந்த தலைவராகத் திகழும் கிம் ஜோங் வுன் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் வடகொரியாவைச் சக்தி வாய்ந்த ஏவுகணைகளாலும் அணு ஆயுதங்களாலும் பலப்படுத்தி வந்துள்ளார்.

கடந்த யூலை 4ஆம் திகதி வடகொரியா முதன்முறையாகக் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் ஒன்றைச் சோதனை செய்தது.அதன் பின்னர் தொடர்ந்து ஏவுகணை சோதனையை முன்னெடுத்து வரும் வடகொரியாவால் மூன்றாம் உலக யுத்தம் உருவாகலாம் என்ற நிலை உச்சத்தில் எட்டியது. அமெரிக்க ஜனாதிபதி டிரம்புடன் ஏற்பட்ட காரசாரமான வாக்குவாதங்கள் உலக யுத்த சாத்தியத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது.இதனிடையே வடகொரியாவின் சக்தி வாய்ந்த ஏவுகணைகள் உலகின் முக்கிய நகரங்களைக் குறிவைத்து நிறுத்தப்பட்டுள்ளதாக வெளியான தகவல் போர் குறித்து ஆராயும் நிபுணர்களிடையே மீண்டும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.முன்னாள் சோவித் அரசால் வடிவமைக்கப்பட்டுள்ள ஸ்கட் ஏவுகணை தான் வடகொரியாவின் பலம் என தெரிய வந்துள்ளது.

# எந்த வேடமும் சரி அஜித்துடன் என்றால்



சென்னை, ஒக்.20

ஓவியா தான் இப்போது பல இளைஞர்களின் கனவுக் கன்னி. பிக் பாஸ் நிகழ்ச்சி மூலம் தன்னுடைய உண்மையான குணத்தால் அனைவரையும் மிகவும் கவர்ந்துவிட்டார். தற்போது இவர் எந்த நிகழ்ச்சிக்குச் சென்றாலும் அமோக வரவேற்பு கிடைக்கிறது. அண்மையில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இவரிடம் தல அஜித்துடன் நடிப்பீர்களா என்று கேட்டுள்ளனர். அதற்கு அவர், அவர்கள் என்னை கூப்பிட்டால் எந்த வேடத்திலும் நடிக்க தயார். வேலைக்காரியாக கூட நான் நடிப்பேன், எனக்கு பிரச்சினை இல்லை என்று கூறியுள்ளார்.

## நிதானமாக போகலாமே–கீர்த்தி சுரேஷ்




நடிகை கீர்த்தி சுரேஷ்க்கு ரெமோ படத்திற்குப் பிறகு வாய்ப்புகள் குவிந்து வருகிறது. தற்போது விக்ரமுடன் சாமி 2 ,சூர்யாவுடன் தானா சேர்ந்த கூட்டம், பவன் கல்யாணுடன் ஒரு படம், சண்டகோழி 2 படத்தில் நடித்துள்ளார். பிசியான நடிகையான இவர் பல படங்களைத் தவிர்த்து வருகிறார்.இதற்கான காரணத்தை அவரே கூறியுள்ளார். அவசரம், அவசரமாகப் படங்களில் நடிக்க வேண்டும் என்று நினைக்கவில்லை.நிதானமாக வளர வேண்டும் என நினைக்கிறேன்.அப்பா, அம்மா, பாட்டி,அக்கா என எல்லோரும் இப்போது நடித்துக் கொண்டு வருகிறார்கள். குடும்பமே சினிமால இருக்காங்க.இந்த ஃபேமிலி இருந்த வந்ததால நான் அவசரப்பட விரும்பல, நிதானமா போகலாமே என கூறியுள்ளார்.

# கதிகலங்க வைத்த திமிங்கலம்

பிரான்ஸ், ஒக்.20

பிரான்ஸில் துறைமுகம் ஒன்றில் சிக்கிக் கொண்ட 15 அடி திமிங்கலத்தால் பரபரப்பு ஏற்பட்டது.தெற்கு பிரான்ஸின் மாரிசில்லீ நகரில் உள்ள துறைமுகம் ஒன்றில் நேற்று 15 அடி நீள திமிங்கலம் வந்துள்ளது. இடையில் சிக்கிக் கொண்ட நிலையில், வெளியே வரமுடியாமல் தவித்துள்ளது, இதனால் போக்குவரத்தும் முடங்கியுள்ளது.உடனடியாக அங்கிருந்த காவற்துறையினர் மற்றும் கடல்வழித் தீயணைப்புப் படையினர் பல மணி நேரங்களாகப் போராடித் திமிங்கலத்தை ஆழ்கடல் பகுதிக்கு கொண்டு சென்று விட்டனர். இது தொடர்பான புகைப்படங்களை பொலிஸார் டுவிட்டரில் வெளியிட்டுள்ளனர்.

# வட்ஸ் அப்பிலும் லிவ் லொக்கேசன்



வட்ஸ் அப் பயன்படுத்தாத நபர்களே இல்லை என்று சொல்லும் அளவுக்கு வளர்ந்து விட்டது, வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் புதுப்புதுத் தொழில்நுட்பங்களையும் அறிமுகப்படுத்தி வருகிறது.இந்த நிலையில் லிவ் லொகேசன் என்ற புதிய நுட்பம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் தங்களது இருப்பிடத்தை நண்பர்களுடன் நேரடியாகப் பகிர்ந்து கொள்ள முடியும். கூகுள் மப், ரெலிகிறாம், ஐ மெசேச், ஸ்நாப் சற் போன்றவற்றில் இது ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நிலையில் வாட்ஸ் அப்பிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# நாய்க்கறி விற்பனை அமோகம்

இந்தியா, ஒக்.20

சீனாவில் நாய்க்கறி விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது. அங்கு நாய்க்கறித் திருவிழா நடைபெறும் நாளன்று ஆயிரக்கணக்கான நாய்கள் கொல்லப்படுகின்றன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அங்கு எந்தவித நடவடிக்கையும்மேற்கொள்ளப்படுவதில்லை.அதேபோன்ற நிலை இந்தியாவில் வடகிழக்கு மாநிலங்களான அசாம், மிசோரம், திரிபுரா, நாகலாந்து உள்ளிட்ட மாநிலங்களிலும் நடைபெறுகிறது. இங்கும் நாய்க்கறி விற்பனை நடக்கிறது.அதற்காக ஏராளமான நாய்கள் கடத்திச் செல்லப்படுகின்றன. கடந்த சில நாட்களுக்கு முன்பு மிசோரம் மாநிலத்துக்கு மினி லாரியில் நாய்கள் கடத்திச் செல்லப்பட்ட காட்சி சமூக வலைத் தளங்களில் வீடியோ ஆக பரவியது. அதில் கால்கள் கட்டப்பட்ட நாய்கள் சாக்கு மூட்டைகளில் அடைக்கப்பட்டுக் கடத்தப்படும் நிலையில் இருந்தது.அவை மிசோரம் மாநில தலைவர் ஷவால் நகரில் இறைச்சிக்காக கடத்தப்படுவது தெரியவந்தது. அதைப் பார்த்த நாய்கள் நல ஆர்வலர்கள் கொதிப்படைந்தனர்.

அன்புடன் வளர்க்கப்படும் நாய்கள் இறைச்சிக்காகக் கடத்தப்படுவதற்கு விலங்குகள் நல ஆர்வலர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இறைச்சிக்காக நாய்கள் கொல்லப்படுவது சட்டப்படி குற்றம் என நீதிமன்றம் தீர்ப்பு அளித்த பிறகும் இதுபோன்று நடந்து கொள்வது கண்டனத்துக்குரியது எனக் கூறியுள்ளனர்.



# நிலநடுக்கம்

ஜம்மு காஷ்மீர், ஒக்.20

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நேற்று அதிகாலை 6.40 மணியளவில் நிலநடுக்கம் உணரப்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 4.7 ஆக பதிவாகிருந்தது. இந்த நிலநடுக்கம் காரணமாக ஜம்மு காஷ்மீர் பிராந்தியத்தில் உள்ள வீடுகள் அதிர்ந்தன. எனினும், நிலநடுக்கம் காரணமாக உயிரிழப்போ பொருட்சேதமோ ஏற்படவில்லை. நில அதிர்வு மண்டலத்தில் அமைந்துள்ள ஜம்மு காஷ்மீரில் அவ்வப்போது நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. கடந்த செப்ரெம்பர் 24ஆம் திகதி இதே போல் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது பாரமுல்லா மாவட்டத்தின் சம்பால் நகரில் உணரப்பட்டது. இதே போல் ஓகஸ்ட் 24ஆம் திகதி 5.0 ரிக்டர் அளவில் ஜம்மு காஷ்மீர் பிராந்தியம் முழுவதும் நிலநடுக்கம் ஏற்பட்டது. 2005ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கம் தான் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இந்தியா மற்றும் பாகிஸ்தானில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவங்களைப் பாடமாக்கி விடியலுக்கு களம் அமைக்க வேண்டும்

கடந்துவந்த அனுபவங்களைப் பாடமாகக்கொண்டு கிடைக்கப்பெறும் வழிமுறைகளை தமிழ் மக்களின் நிரந்தர விடியலுக்கான களமாக அமைக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அந்தவகையில் அதற்கான யதார்த்தமான வழிமுறைகளை இலக்காகக்கொண்டே நாம் அரசியல் நகர்வுகள் முன்னெடுத்துவருகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். சாவகச்சேரி மறவன்புலோ மேற்கு பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், தமிழ் மக்களுக்கான அரசியல்த் தீர்வு விடயத்திலும் ஒரு வழமான ஒளிமயமான வாழ்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதையும் நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். அத்துடன் மக்கள் நிலையான சமூக,பொருளாதாரத்தை கட்டி வளர்ப்பதனூடாகவே தனிநபர் மட்டுமன்றி தான் சார்ந்துவாழும் சமூகத்தை பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் காணச்செய்யமுடியும் - என்றார். (உ)

# சர்வதேச நெல் ஆய்வு அலுவலகம் இலங்கையில்

கொழும்பு , ஒக்.20

பிலிப்பைன்ஸில்தலைமையகத்தைக் கொண்டுள்ள சர்வதேச நெல் ஆய்வு நிறுவனத்தின்நடவடிக்கை அலுவலகம்ஒன்று இலங்கையில் அமைக்கப்படவுள்ளது. பத்தலகொட நெல் ஆய்வு நிறுவனத்தில்இதனை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக சர்வதேச அரிசி ஆய்வு நிறுவனமும் இலங்கையிலுள்ள நெல் ஆய்வு நிறுவனமும் புரிந்து உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடவுள்ளதாக கமத்தொழில் அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார். இதற்காக அமைச்சர் சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இலங்கைக்குத் தேவையான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவை பெறுக் கொள்வதே இந்த சர்வதேச நெல் ஆய்வு நடவடிக்கை அலுவலகம் ஒன்றை இலங்கையில் அமைப்பதன் நோக்கமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# கடனைத் தீர்க்க தனியார் மயம்

## மத்தியவங்கி ஆளுநர் ஆலோசனை

கொழும்பு,ஒக்.20

இலங்கைக்கு ஏற்பட்டுள்ள கடன் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான தெளிவான திட்டம், இலங்கையிடம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ள மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, துணை நிறுவனங்களின் விற்பனை மூலமாகவும், அதேபோல் தனியார்மயமாக்கல் மூலமாகவும் கிடைக்கும் பணம், கடன்களை அடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

"இதை ஓர் அச்சுறுத்தலாக நாங்கள் பார்க்கவில்லை" என்று தெரிவித்ததோடு, "இதுவரை நாங்கள், கடன் மீளச்செலுத்துலுக்கான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் தவறவிடவில்லை. அதைச் செய்யும் நோக்கம் எங்களுக்கில்லை. இந்நிலைமையைச் சமாளிக்கும் தெளிவான திட்டம், எங்களிடமுள்ளது" என்றும் தெரிவித்தார். (உ)

# தலிபான்கள் அதிரடி 43 படையினர் பலி!

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் தாக்குதலில் 43 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

தலிபான் தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டும் நோக்கத்தில் உள்நாட்டு இராணுவத்தினர் உச்சகட்டப் போரில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு ஆதரவாக 'நேட்டோ' எனப்படும் பன்னாட்டுப் படையினரும் போரில் இணைந்துள்ளனர்.இந்த நிலையில், நாட்டின் தென்பகுதியான கந்தஹார் மாகாணத்திற் குட்பட்ட மைவான்ட் இராணுவ முகாம் மீது தலிபான்கள் நேற்று கார் வெடிகுண்டு மூலம் தாக்குதல் நடத்தியுள்ளனர். பின்னர் சரமாரியாகத் துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இராணுவமும் பதில் தாக்குதல் நடத்தியது. பல மணி நேரம் நடந்த இந்தச் சண்டையில் 43 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர் என அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. இராணுவத்தின் பதில் தாக்குதலில் 10 க்கும் அதிகமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. (இ)

# இளைஞனைக் காணவில்லை பொலிஸில் முறைப்பாடு

தலவாக்கலை ,ஒக்.20

இளைஞன் ஒருவரை கடந்த 17 ஆம் திகதி இரவு 7 மணி முதல் காணவில்லையென தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது. தீபாவளியினை முன்னிட்டு புத்தளப் பகுதியிலிருந்து தலவாக்கலைப் பகுதிக்கு வர்த்தக நடவடிக்கைக்காக சென்ற புத்தளம் கந்தகுடா பகுதியைச்சேர்ந்த முகமது நிலாம்தீன் முகமது அஸ்ஜட் (வயது 18) என்பவரே காணாமல் போயுள்ளார்.

இவர் கடந்த 10 ஆம் திகதி தலவாக்கலை பகுதிக்கு சென்று தலவாக்கலை நகரசபையின் கடையொன்றினை கூலிக்காக பெற்று வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் கடந்த 17 ம் திகதி இரவு கழிவறை செல்வதாக கூறி விட்டு சென்ற இளைஞன் 18 ஆம் திகதிவரை வராதமையினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை தலவாக்கலைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (உ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

# வடக்குக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொல்லுகளால் அடிதடிகளையும் மேற்கொள்கிறார்கள். இவை எமக்கும், முன்னிலை சோஷலிசக் கட்சிக்குமே செய்கிறார்கள். ஆனால் ஜே.வி.பிக்கும், வடக்கிற்கும் அந்த சட்டம் உள்ளதா? வடக்கில் போராட்டம் செய்யாதபடி நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்தது. ஆனால் ஜனாதிபதியின் வழியை மறித்து அங்கு போராட்டம் நடத்தப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட அங்கே இருந்தார்கள். எவராகிலும் கைது செய்யப்பட்டார்களா? நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்களா?இங்கே பொலிஸாரின் சட்டம் அல்ல, அரசாங்கத்தின் சட்டத்தையே பொலிஸார் அமுல்படுத்துகின்றனர்" என்றார். (எ-05)

# மழுப்பியது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பக வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தலைமையிலான குழுவினர் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடினர். இந்த சந்திப்பு கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் சுமார் ஒருமணித்தியாலத்திற்கும் மேல் நடைபெற்றது.

இதன்போது அநுராதபுரம் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் தாயார் கண்ணீர்மல்க தங்களது கவலையை வெளிப்படுத்தினர்.

இதேவேளை அரசியல் கைதிகளின் உடல்நிலை மோசமடைந்துள்ள நிலையிலும் இன்னமும் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் கலந்துரையாடல் நிலையிலேயே உள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் போராடிவரும் பொது அமைப்புக்கள் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் இதற்கு முன்னரும் ஜனாதிபதி இவ்வாறே குறிப்பிட்டிருந்தார் என கூறியுள்ளன. கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதிக்கு எதிராக கறுப்புக்கொடி காட்டியவேளையும் அவர் இக்கருத்தினையே தெரிவித்திருந்தார் எனக் குறிப்பிட்டுள்ளன. (எ)

# எங்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கைதிகளாகிய நாம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகமான தங்களுக்கு அன்புரிமையுடன் வேண்டுகோள் ஒன்றினை முன்வைக்கும் முக்கிய தருணம் ஏற்பட்டுள்ளது எனக் கருதுகின்றோம்.

'அன்று'களில் சமூக விடுதலைக்காக சிலுவை சுமந்த நாம், 'இன்று'களில் சரீர விடு

தலைக்காக போராடும் நிலை ஏற்பட்டுள்ளது. எம்மவர் சாதனைகளை சாலையேற்றி கதிரையேறிய கதா பாத்திரங்கள் கண்மூடிச் செயற்படுகின்ற இவ்வேளை கல்விப்புலத்தைக் கொண்டு பல்கலைக்கழக சமூகம் கண்கூர வேண்டும் என்று எம் கம்பிக்கூண்டுக்குள் இருந்து கருணைத் தூது அனுப்புகின்றோம்.

அன்றுமுதல் இன்றுவரை தமிழரின் வாழ்வுரிமைப் போராட்டங்களில் வரையறுத்துக் கூறமுடியாத பெரும் வகிபாகத்தை நல்கிவரும் சமூக மன்றங்களும் பல்கலைச் சமூகத்தினதும் சிவில் சமூகங்களினதும் காலமறிந்த செயற்பாடுகளே முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான முழுத் தமிழரினதும் முதுகெலும்பாக இருந்து வருகிறது. இதனைக் கண்டே இலங்கை ஆட்சியாளரும் எம் தமிழினத்தின் வாக்கு வேட்டையாடிகளும் ஏன் சர்வதேசத்தினரும்கூட சிலவற்றையேனும் தமிழருக்கு செய்யத் தலைப்படுகின்றனர்.

அரசியலுக்கு அப்பாலான அகிம்சைக் குரல்களை அவ்வளவு இலகுவில் யாராலும் அடக்கிவிடவோ அலட்சியப்படுத்தவோ முடியாது என்ற உண்மையின் அடிப்படையில் உங்கள் தூண்டுதல்களால் எங்கள் விடுதலை வாழ்வு துலங்கவேண்டும் என தடுப்புச் சிறைக்குள் இருந்து தாகம் கொள்கின்றோம். அதற்கு எம் தமிழ் உறவுகளின் கரங்கள் உங்களை வலுப்படுத்தும் என நம்புகின்றோம்.

8 முதல் 24 ஆண்டுகளாக இருள் வாழ்வில் மூழ்கிக் கிடக்கும் தமிழ் அரசியல் கைதிகளான எம்முள், " 03 மரண தண்டனைக் கைதிகளும் 08 ஆயுள் தண்டனைக் கைதிகளும் 10 தொடக்கம் 200 வருட கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களும் அதற்கு மேலதிகமாக வழக்கு விசாரணைகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் விளக்கமறியல் கைதிகளுடன் சேர்த்து சுமார் 130 பேர் இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம்.

எமது நெடுங்கால சிறைவாசம் குடும்பத்தினதும் பிள்ளைகளினதும் அன்றாடத்தை அழிவு நிலைக்குத் தள்ளி ஆண்டுகள் பல கடந்துவிட்டன. சமூக, பொருளாதார, கலாசாரப் பிரச்சினைகள் அவர்களைச்சீரழித்துக்கொண்டிருக்கின்றன. உறவுகளின் எல்லையற்ற பிரிவு மனங்களை உருக்குலையச் செய்கிறது. இத்தனையும் சமூக விடுதலைக்கு சாமரம் வீசியதால் இலங்கை அரசு எமக்களித்த சிறப்புச் சலுகை என்பதை சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். சிரமேற்றுச் செயற்படுங்கள்!

தமிழரின் அரசியல் விடுதலைக்கான "போராட்டத்துடன் தொடர்புபட்டவர்கள்" என்ற காரணத்தைக் காட்டி சிறை வைக்கப்பட்டிருக்கும் நாம், 'போர்க் கைதிகள்' அல்லது 'அரசியல் கைதிகள்' என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. ஆகையினால், யுத்தம் ஓய்ந்து 08 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அரசாங்கம் நல்லிணக்க அடிப்படையில் அரசியல் தீர்மானம் ஒன்றை எடுத்து அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளையும் ஏதேனும் ஓர் பொறிமுறையின் ஊடாக விடுதலை செய்ய வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

எமது இந்த நீதி நியாயமான கோரிக்கையை பலப்படுத்தி, பிறர்நலம் போற்றும் அருளறம் வாய்ந்த பல்கலைக்கழகத் துணைவேந்தர், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், அனைத்துப் பீட மாணவர் ஒன்றியத்தினர் மற்றும் கல்விசாரா ஊழியர் சமூகத்தினர் என அனைவரும் ஓரணியில் நின்று ஒருமித்துக் குரல் உயர்த்தி எமது விடுதலையை வலுப்படுத்த வேண்டும் என விநயமுடன் வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றுள்ளது. (எ)

# இருவேறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடுவீதியில் துடித்துக் கொண்டிருந்த இளைஞரை மக்கள் அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் இரவு அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகத்தில் நடத்தப்பட்ட விளையாட்டு விழாவை பார்க்கச் சென்ற இரு பகுதியினர் இடையே ஏற்பட்ட முரண்பாடு கத்திக் குத்தில் முடிந்தது. இதில், ம.கார்த்திகன் என்ற இளைஞர் கழுத்தில் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த இருவரும் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெண்ணை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு சில சுயலாபம் கருதுகின்றவர்கள் இந்த அரசியல் யாப்பிலே எதுவிதமான தீர்வுமில்லை. எதுவிதமான முடிவுமில்லை. கூட்டமைப்பு முற்றுமுழுதாக தமிழ் மக்களை மோசம் செய்து விட்டது என பிரச்சாரம் செய்கின்றனர். இவ்வாறாக இந்த மக்களை குழப்புகின்ற வகையிலே நடைபெறும் பிரசாரங்கள் நிறுத்தப்பட வேண்டும் புத்திஜீவிகள் உண்மை எது சாத்தியமானது எது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

வெண்ணை திரண்டுவரும் போது தாழி உடைந்த கதையாக பல சம்பவங்களை நாங்கள் அறிவோம். இவ்வாறான இந்த சந்தர்ப்பத்தை நாம் தவறவிடாது எமது மக்களுக்கு ஒரு நிம்மதியை ஒரு விடிவை தேடிக்குடுக்கின்ற வகையில் அனைவரும் புத்திசாலித்தனமாக ஒத்துழைக்க வேண்டும்" - என்றார். (எ-212)

# புதிய அரசியல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிநடத்தற்கு குழுவின் இடைக்கால அறிக்கையை, இலங்கை ஊடக கல்லூரி உள்ளிட்ட 3 நிறுவனங்கள் பகுப்பாய்வு செய்து தயாரித்த அறிக்கை நேற்று பிரதமரிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வு நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "அஸ்கிரிய மற்றும் மஹா நாயக்க தேரர்கள் ஒன்று கூடி, தற்போதைய சூழ்நிலையில் புதிய அரசியல் யாப்பு ஒன்றோ, யாப்பின் திருத்தமோ தேவையில்லை என்று தீர்மானித்ததாக செய்திகள் வெளியாகின. இந்த செய்தியை பல ஊடகங்கள் பிரதான தலைப்புச் செய்தியாக வெளியிட்டு மல்வத்தை மஹாநாயக்கரின் படத்தையும் பிரசுரித்திருந்தன. ஆனால் அவர் நாட்டிலேயே இல்லை. இன்று காலையும் நான் அவருடன் கலந்துரையாடினேன். அவர் அந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறு மஹாநாயக்க தேரர் கலந்து கொள்ளாத ஒரு கூட்டத்தில் அவர் புதிய அரசியல் யாப்பு தயாரிப்புக்கு எதிராக தீர்மானம் மேற்கொண்டதாக செய்தி வெளியிட்டமையை ஏற்றுக் கொள்ள முடியாது. அதேநேரம் இன்னும் அரசியல் யாப்பு தயாரிக்கப்படவில்லை. அதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மாத்திரமே இடம் பெற்றுள்ளன" - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli


# வறட்சி நிவாரணம்; காலம் நீடிப்பு

கொழும்பு,ஒக்.20

வறட்சி நிவாரணம் வழங்கிவந்த காலத்தை நீடிப்புச் செய்வதற்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடந்த ஒரு சில தினங்களில் சில மாவட்டங்களுக்கு குறிப்பிடத்தக்களவு மழை வீழ்ச்சி கிடைத்த போதும், அது குறித்த பின்னடைவில் இருந்து மக்களை மீட்கும் அளவுக்கு போதுமானதாக அமையவில்லை. அதனடிப்படையில், அக்குடும்பங்களுக்காக தற்போது பெற்றுக் கொடுக்கப்படுகின்ற உலர் உணவுக் கூப்பன்களை தொடர்ந்தும் பெற்றுக் கொடுப்பதற்கும், இப்பணிக்கு அவசியமான நிதியினை பெற்றுக் கொள்வதற்கும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா அவர்களினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவுகின்ற கடுமையான வறட்சியினால் பல மாவட்டங்களிலும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உலர் உணவுக் கூப்பன்களை அரசாங்கம் வழங்கி வருகின்றது. அதனடிப்படையில் 19 மாவட்டங்களின் 7,40,000 குடும்பங்களுக்காக உலர் உணவுக் கூப்பன்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## மதம் பிடித்தலையும் மதங்கள்: வதைபடும் மனிதர்



# வீடுகளில் திடீர் டெங்குப் பரிசோதனை

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் கடந்த சில தினங்களாக வீடுகளில் தொடர்ச்சியாகத் திடீர் டெங்குப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இதன் போது நுளம்புப் பெருக்கம் ஏற்படும் வகையில்வீட்டுச்சூழலலை வைத்திருந்தவர்களுக்கு தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன், குறித்த தினத்தில் வீட்டில் ஆள் நடமாட்டம் இல்லாத வீடுகளுக்கு எச்சரிக்கைப் பத்திரமும் வழங்கப்பட்டது. பரிசோதனையை பிரதேச செயலகத்தினர், பொலிஸார், படையினர் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கழுத்தறுத்து தற்கொலை

கொழும்பு,ஒக்.20

மல்வானைப் பகுதியில் பெண் உபஅதிபர் ஒருவர் கழுத்தை வெட்டித் தற்கொலை செய்துக்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் குளியலறைக்குச் சென்ற குறித்த பெண் உபஅதிபர் கத்தியால் கழுத்தை வெட்டிக்கொண்டு பாரிய சத்தத்துடன் அழுதுள்ளார். இந்த நிலையில் சத்தத்தினைக் கேட்ட கணவர் சென்று பார்வையிடும் பொழுதும் பாரிய கத்தியால் கழுத்தினை வெட்டிக்கொண்டிருந்துள்ளார். இந்நிலையில் அவரை தடுத்த கணவரும் மகனும் இணைந்து, பியகம வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். மல்வானை - தொம்பே - கிம்புல்விலவத்தை மகா வித்தியாலயத்தில் உதவி அதிபராக சேவையாற்றும் 54 வயதுடைய லலனி மந்ரிரத்ன என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துக் கொண்டு உயிரிழந்தார். அவரது தற்கொலைக்கான காரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (உ)

## முத்தமிழ் விழா



யாழ்.விக்ரோறியாக் கல்லூரியில் நேற்று முத்தமிழ் விழா கல்லூரித் தமிழ் மன்றத்தால் நடத்தப்பட்டது. கோலாகலமாக இடம்பெற்ற இந்த நிகழ்வின் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸூம் சிறப்பு விருந்தினராக யூனியன் கல்லூரி ஆசிரியர் நிறஞ்சதுர்க்கனும் கலந்து சிறப்பித்தனர்.

# வசீம் தாஜூதீனின் கொலை விவகாரம் சட்ட வைத்திய அதிகாரிக்கு பிணை

கொழும்பு, ஒக்.20

முன்னாள் றக்பி வீரர் வசீம் தாஜூதீனின் கொலை வழக்குடன் தொடர்புடைய கொழும்பின் முன்னாள்சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகரனுக்கு கொழும்பு கோட்டை மேலதிக நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. இவர் நேற்று பிற்பகல் கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றில், தனது சட்டத்தரணியுடன் சென்று சரணடைந்திருந்தார். றக்பி வீரர் வசீம் தாஜூதீனின் கொலைச்சம்பவம் தொடர்பில் தன்னை கைது செய்ய குற்றப்புலனாய்வு திணைக்களம் தயாராகவுள்ளதாகவும், உரிய பிணையில தன்னை விடுதலை செய்யுமாறு கோரியும் முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர, மனுவொன்றையும் தாக்கல் செய்திருந்தார். இதற்கமையவே நேற்று தனது சட்டத்தரணியுடன் நீதிமன்றில் முன்னிலையாகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# ஆசிரியர் நியமனத்தில் தவறு ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

இவ்வருடம் ஆசிரிய நியமனம் கிடைக்கும் கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சிபெற்ற வடமாகாணத்தைச்சேர்ந்த 400 க்கும்மேற்பட்ட ஆசிரியர்களில் 207பேர் மட்டுமே வடக்கு மாகாணத்திற்கு நியமனம் செய்யப்படவுள்ளனர். இது தொடர்பில் கண்டனம் தெரிவித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

இவர்களை ஆசிரிய பயிற்சிக்காக இணைக்கும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதேசசெயலக பிரிவுகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களையும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் வெற்றிடங்களையும் கணக்கில் கொண்டே விண்ணப்பங்கள் கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி வடக்கு மாகாணத்தில் 500மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. ஆனால் பயிற்சி முடித்த ஆசிரியர்களில் அரைவாசிப்பேருக்கே வடக்கு மாகாணத்துக்கு நியமனம் வழங்கியுள்ள மத்திய அரசு தவறிழைத்தது மட்டுமன்றி வடக்கு மாகாணத்தின் கல்வியை இன்னும் பாதாளத்துக்குக் கொண்டுசெல்ல முயலுகின்றது.

ஒட்டுமொத்தமாக வடக்கு மாகாண ஆசிரிய வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரம் வடக்கு கல்வி அமைச்சிடம் வழங்கப்படவேண்டும். அல்லது வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களை மதித்து தேவையானவற்றை மத்திய அரசு வழங்க வேண்டும். - என்றுள்ளது. (உ)

# வடக்கு, கிழக்கு கரையோரங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கும்

கொழும்பு, ஒக்.20

மன்னார் முதல் காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையும் மாத்தறை முதல் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற் பிரதேசங்களில் காற்றின் வேகமானது அதிகரித்து வீசக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. காலநிலை அவதான நிலையம் விடுத்துள்ள செய்திக்குறிப் பொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த கடற்பகுதிகளில் காற்றின் வேகமானது 70 முதல் 80 கிலோ மீற்றராக அதிகரித்து வீசக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கடற்றொழில் மற்றும் கடல்சார் சமூகம், அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதே வேளை, மொனராகலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் எனவும் காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது. (உ)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 20.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.